Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 75 | புதன்கிழமை Wednesday | 14.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# 83 மீனவர்கள், 252 படகுகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை தேவை

## வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



சென்னை: இலங்கைக் கடற்படையினரால்சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கும், தமிழக மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், உரிய தூதரகநடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

10 மீனவர்கள் கைது: இலங்கைக்கு அருகே தென்கிழக்கு வங்கக்கடலில்ஏற்பட்டிருந்தஆழ்ந்த காற்றழுத்து தாழ்வு மண்டலம் காரணமாக கடந்த ஒரு வாரமாக ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு அனுமதி சீட்டு ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில் கடலுக்குச் செல்லவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) வானிலை இயல்பு நிலைக்கு திரும்பியதை தொடர்ந்து, நேற்று (திங்கட்கிழமை) காலையில் ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் 400-க்கும் மேற்பட்ட படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இதனிடையே, நெடுந்தீவு அருகே ராமேசுவரம் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, தென்னரசு என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை சிறைப்பிடித்துள்ளனர். மேலும், படகில் இருந்த ஜார்ஜ், சுதன், கனகராஜ், சுமித், பரலோக ராஜ், கோபி, ஆரோக்கிய ரூபட், பிரேம்குமார், தினேஷ், ராஜேஸ் ஆகிய 10 மீனவர்களை இன்று (செவ்வாய்கிழமை) அதிகாலை கைது செய்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்குதமிழகமுதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், "அறுவடைத்திருநாளான பொங்கல் பண்டிகையையொட்டி, தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள ஒரு துயரச் சம்பவம் தொடர்பாகவும், தொடர்ந்து அவர்கள் எதிர்கொண்டுவரும் இன்னல்கள் தொடர்பாகவும் ஒன்றிய வெளியுறவுத்துறைஅமைச்சர்கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

13-01-2026 அதிகாலையில், இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில்மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற ராமநாதபுரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாட்டு மீனவர்கள் இதுபோன்று தொடர்ந்து கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்படுவதும் மிகுந்த கவலையளிக்கிறது.

மேலும், தற்போதைய நிலவரப்படி, சமீபத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட, இதுவரை மொத்தம் 83 மீனவர்களும்,252 மீன்பிடிப் படகுகளும் இலங்கை வசம் உள்ளது.

சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் துயரமான மற்றும் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொள்க.

பொங்கல் பண்டிகையினை தங்கள் குடும்பத்தினருடன் கொண்டாடிட ஏதுவாகவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும்,அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், தொடர்ந்து இதுபோன்ற கைது நடவடிக்கைகளைத் தடுத்திடவும், ஒன்றிய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.




# அனைவருக்கும் சமமான கல்வி வேண்டும்; தனியார்மயம் கூடாது; ராகுல் காந்தி எம்.பி. பேச்சு



நாட்டில் கல்வி ஒருபோதும் தனியார்மயமாகக் கூடாதி என்றும் அனைவருக்கும் சமமாக அது கிடைக்க வேண்டும் எனவும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி (ஜன. 13) தெரிவித்துள்ளார்.

மற்றவர்களின் மொழி, கலாசாரம், மதத்திற்கு மரியாதை அளிக்கும் இந்தியாவை வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் அதற்குபங்களிப்புசெய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தின் கூடலூரில் உள்ளபள்ளி நூற்றாண்டு விழா நிகழ்வில் ராகுல் காந்தி கலந்துகொண்டார். அவருக்கு காங்கிரஸ் கட்சியினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

பின்னர் நீலகிரியில் உள்ள பழங்குடி மக்களுடன் நடனமாடினார். தொடர்ந்து, பள்ளி நிகழ்ச்சியில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது மாணவர்களுடன் உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் ராகுல் காந்தி பேசியதாவது:

"ஐடி துறையில் இந்தியா சிறந்து விளங்குகிறது. தரவுகள் எளிமையாகக் கிடைக்கும் காலகட்டத்தின் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தகவல் தொழில்நுட்பப் புரட்சி குறித்து கேள்விப்பட்டிருப்போம். செய்யறிவு (ஏஐ) மற்றும் தரவுகள் என அடுத்தடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறோம். தரவுகளை சுலபமாக அணுககக்கூடிய மற்றும் பெறக்கூடிய இடத்தில் இருக்கிறோம்.

அத்தகைய தரவுகளைப் பெற்று அறிவாக மாற்றிக்கொள்ளும் வகையில் மாணவர்களை உருவாக்கும் பணிகளில் பள்ளிகள் ஈடுபட வேண்டும். ஞானத்துடன் அறிவியல் வளர்ச்சியை பயன்படுத்தும் வகையில் மாணவர்களை தயார்ப்படுத்த வேண்டும். தரவுகளால் கையாளப்படும் சூழலிலும் ஞானமுடன் நடந்துகொள்ளும் குடிமக்களை பள்ளிகள் உருவாக்க வேண்டும். ஞானம் இல்லாமல் தரவுகளால் மட்டுமே நாம் கையாளப்படும்போது விரும்பத்தகாத இடமாக இந்த பூமி மாறிவிடும்.

கல்வி ஒருபோதும் தனியார் மயமாகிவிடக் கூடாது, மாணவர்கள் அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்க வேண்டும். ஆண்களை விட பெண்கள் சிறந்து விளங்குகின்றனர்.

மாணவர்கள் சிறந்த குடிமக்களாக மாறும் இடத்தில் கல்வி நிலையங்கள் உள்ளன. இதில் பள்ளிகளுக்கு முக்கியப் பங்கு உண்டு" எனக் குறிப்பிட்டார்.

ஜன நாயகன் திரைப்படத்தை தடுக்கும் முயற்சியானது தமிழ் கலாசாரத்தின் மீதான தாக்குதலாகும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ஜன நாயகன் திரைப்படத்துக்கான தணிக்கைச் சான்றிதழை வழங்காமல் மத்திய அரசின் தணிக்கை வாரியம் தாமதப்படுத்தி வரும் நிலையில், அந்தப் படத்தின் வெளியீடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் படத்தின் தயாரிப்பு நிறுவனம் வழக்கு தொடர்ந்துள்ளது.

ஜன நாயகனுக்கு ஆதரவாக காங்கிரஸ் உள்ளிட்ட தமிழகத்தின் அரசியல் கட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்து வரும் நிலையில், முதல்முறையாக ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக ராகுல் காந்தி வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"ஜன நாயகன்' திரைப்படத்தைத் தடுக்கும் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் முயற்சி,தமிழ் கலாச்சாரத்தின் மீதான ஒரு தாக்குதலாகும். தமிழ் மக்களின் குரலை அடக்குவதில் நீங்கள் ஒருபோதும் வெற்றி பெறமாட்டீர்கள் மோடி" என்று குறிப்பிட்டு ள்ளார். ஏற்கெனவே மெர்சல் பட விவகாரத்தின் போது, மத்திய அரசுக்கு கண்டனம் தெரிவித்து ராகுல் காந்தி பதிவிட்டிருந்தார்.

அப்போது ராகுல் வெளியிட்ட பதிவில், "மோடி அவர்களே, சினிமா என்பது தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் ஆழ்ந்த வெளிப்பாடு.மெர்சல் பட விவகாரத்தில் தலையிட்டு தமிழின் தன்மானத்தை மதிப்பு – இறக்கச் செய்யாதீர்கள்" என்று குறிப்பிட்டிருப்பார்.

# தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு



சென்னை : வடகிழக்கு பருவமழை அடுத்த மூன்று தினங்களில் தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகள் மற்றும் அதனைஒட்டியதென்னிந்திய பகுதிகளிலிருந்து விலகுவதற்கான வாய்ப்புள்ளது. மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டலகீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

14-01-2026: தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஒரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

15-01-2026: தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

16-01-2026: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். 16-01-2026 முதல் 19-01-2026வரை:தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னையை பொறுத்தவரையில், (14-01-2026) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை (15-01-2026): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தகவலை தெரிவித்துள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



கன்னியாகுமரி காந்தி மண்டபம் பகுதிகளில் நடைபாதை மற்றும் பொது இடங்களை ஆக்கிரமித்திருந்த கட்டடங்கள், கடைகள் அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் போக்குவரத்து சீரமைக்கப்பட்டு, நகராட்சி மற்றும் காவல்துறை இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.



பொங்கல் விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் தி.மு.க சார்பாக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ. மகேஷ் அவர்கள் தலைமையில் மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் பொங்கல் விழா நடைபெற்றது. இவ்விழாவில் திராவிட சமத்துவ பொங்கலை துவக்கி வைத்து கழக இருவர்ண கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மாநில, மாவட்ட, மாநகர,ஒன்றிய நகர பகுதி பேரூர் வட்ட நிர்வாகிகள் சார்பு அணிகள் நிர்வாகிகள்கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திட்டக்குடி இந்தியன் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 42வது ஆண்டு விழா கோலாகலம்




கடலூர் மாவட்டம் திட்டக்குடி இந்தியன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் 42-வது ஆண்டு விழா பள்ளியின் தாளாளர் இபிஆர். அரசு தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவினை சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டஅலெக்சாண்டர், டேனியல் மற்றும் சண்முகநாகராஜன் ஆகியோர் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்ததுடன், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

தொடர்ந்து மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களைக் கவரும் வகையில் அரங்கேற்றப்பட்டன.நிகழ்வின் நிறைவாகப்பள்ளியின் முதல்வர் சௌந்தரம், துணை முதல்வர் ராதிகா, அட்மின் நோடல் ராதா,ஆசிரியர்கள் சுகந்தி மற்றும் அகிலா ஆகியோர் நன்றியுரை ஆற்றினர்.

விழாவில் சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கும், திறமைமிக்க மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இதில் பள்ளி மேலாண்மைகுழுவினர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்

# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் தேசிய இளைஞர் தின விழா



தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் தேசிய இளைஞர் தின விழா நடைபெற்றது.

நல்ல விசயங்களை இளம் வயது முதலே வாழ்க்கையில் கற்று கொண்டு அதனை பின்பற்ற பழகி கொள்ள வேண்டும்.சுவாமி விவேகானந்தர் எல்லோரையும் நேசித்தார்.

அவருடைய முதல் உரையாடல் வெளிநாட்டில் நடைபெற்றபோது சகோதர, சகோதரிகளே என்று பேசினார். அவர் இந்தியாவில் மட்டுமல்ல ,வெளிநாட்டில் வாழும் மக்களையும் சகோதர, சகோதரிகளாக நினைத்தார். அவர் ஒரு தெய்வீக மனிதர். அதனால்தான் சுவாமி விவேகானந்தர் என்று அழைக்கிறோம்.

அவர் புனித தன்மை வாய்ந்தவர். பரந்த மனப்பான்மை கொண்டவராக ஒரு சுவாமியாகவிளங்கினார். எனவே அவருடைய பிறந்த நாளை தேசிய இளைஞர் தினமாக கொண்டாடுவது சிறப்பு வாய்ந்தது. வீரத்தோடு, துணிவோடு, பண்போடு வாழ வேண்டும். விவேகத்துடன் வாழ வேண்டும். சிந்தித்து செயல்பட வேண்டும்.என்று வலியுறுத்தியவர். குழந்தைப் பருவத்திலிருந்து இளைஞர் பருவத்திற்கு செல்ல வேண்டும் என்றால், நம்முடைய திறமைகளை நாம் வெளியே கொண்டுவர வேண்டும்.

நம்முடைய திறமைகளை ஆசிரியரிடம் கூறினால் அதற்கு அவர்கள் வழி காட்டுவார்கள். எதிர்காலத்தில் விவேகானந்தர் எதிர்பார்க்கும் இளைஞர்களில் ஒருவராக நீங்களும் வரவேண்டும்.ங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்துங்கள். நீங்கள் நாட்டையே மாற்றக்கூடிய ஒரு சக்தியாக மாறி நாட்டையே மாற்றலாம் என்று பேசினார். என்றார்.விழாவில் விவேகானந்தரின் பொன்மொழிகள் சொல்லுதல் போட்டியில் வெற்றி பெற்ற ரித்திகா ,நந்தனா,ஜெயகாந்தன்,பிரணவி ,ஜெபிகா , நித்திஷா , ஹாஷினி, அஜய் ஆகியோர்க்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவ,மாணவியர் ஆர்வமுடன் விவேகானந்தர் பொன்மொழிகளை எடுத்துக்கூறினார்கள். மழலை மொழியில் மாணவர்கள் பேசியது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.நிறைவாக ஆசிரியை வள்ளிமயில் நன்றி கூறினார்

## மதுராந்தகம் அருகே

# ஆலம் இன்டர்நேஷனல் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா ஆடல் பாடலுடன் வெகு விமர்சையாக நடைபெற்றது



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் அடுத்த தொழுப்பேடு ஊராட்சியில் அமைந்துள்ள ஆலம் இன்டர்நேஷனல் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா பள்ளி வளாகத்தில் வண்ணக் கோலங்கள் இட்டு புது பானையில் பொங்கலிட்டு பொங்கல் பொங்கி வரும் வேளையில் பொங்கலோ பொங்கல் என கோஷமிட்டு மகிழ்ந்தனர். பள்ளியின் தாளாளர் சுமித்தா தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. பள்ளி மாணவ மாணவிகள் பாரம்பரிய உடையணிந்து உறியடி நடனம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகள் நடைபெற்று போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.இவ்விழாவில்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பழனி பாதயாத்திரை பக்தர்களுக்கு மாவட்ட காவல்துறை சார்பில் ஒளிரும் ஸ்டிக்கர்கள் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு வழங்கப்பட்டது



தைப்பூச திருவிழாவை முன்னிட்டு, ஈரோடு மாவட்டத்தில் உள்ள தேசிய, மாநில மற்றும் மாவட்ட நெடுஞ்சாலைகள் வழியாக பழனி மலை முருகன் கோயிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் பாதயாத்திரையாக சென்று வருகின்றனர். பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கருத்தில் கொண்டு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா உத்தரவின்படி, மாவட்டம் முழுவதும் பழனியை நோக்கிச் செல்லும் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நெடுஞ்சாலைகளில் 32 இடங்களில் போலீசார் சிறப்பு பணியில் நியமிக்கப்பட்டு ள்ளனர்.

இப்பணியில் ஈடுபட்டுள்ள போலீசார், பக்தர்களுக்கு இரவு நேரங்களில் பயன்படுத்துவதற்காக ஒளிரும் ஸ்டிக்கர்களை இலவசமாக வழங்கி வருகின்றனர். மேலும், சாலையின் ஓரமாக பாதுகாப்பாக நடந்து செல்ல வேண்டும் என்றும், சாலை ஓரங்களில் படுத்து உறங்கக் கூடாது என்றும் பக்தர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு அறிவுரைகள் போலீசாரால் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும்,நெடுஞ்சாலை ரோந்து வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள ஒலிபெருக்கிகள் மூலம், பக்தர்கள் பாதுகாப்பாக பாதயாத்திரை மேற்கொள்ள தொடர்ந்து விழிப்புணர்வு அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# நந்தா கல்வி நிறுவனங்களில் தமிழரின் பாரம்பரிய பொங்கல் திருவிழா கோலாகலம்

ஈரோடு நந்தா கல்வி நிறுவனங்களான மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவங்கள், பொறியியல் மற்றும் தொழில் நுடபம், பாலிடெக்னிக், கல்வியியல், கலை மற்றும் அறிவியல், சென்டரல் பள்ளி வளாகங்களில் தமிழரின் பாரம்பரிய உழவர் திருநாளான "பொங்கல் திருவிழா" மிகவும் கோலாகலமான முறையில் கொண்டாடப்பட்டது.



இதனை முன்னிட்டு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகம், நந்தா தொழில்நுட்ப வளாகம் மற்றும் சென்டரல் பள்ளி வளாகங்களில் நடைபெற்ற தமிழர்விழாவிற்குஸ்ரீநந்தாகல்விஅறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையேற்றுத் துவக்கி வைத்தார்.

மேலும் இவ்விழாவிற்கு, கோபிசெட்டிபாளையம் இந்தியவேளாண்ஆராய்ச்சிகவுன்சிலின்தலைவரும், முதன்மைவிஞ்ஞானியுமானமுனைவர்பி.அழகேசன் அவர்கள் பேசுகையில், தமிழர் திருநாளை இளைய தலைமுறையினர் போற்றுவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. பொங்கல் விழாவின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளையும், சடங்கு முறைகளையும் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்திய மாணவர்களுக்கு தனது நன்றியினைத் தெரிவித்தார். இயற்கை விவசாய முறையை பின்பற்ற வேண்டும் என்றும், மண் வளத்தை பாதுகாத்து விவசாயத்தை அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பாக கொண்டு சேர்க்க வேண்டும் என்று கூறி, கல்லூரிகளில் பொங்கல்விழாஎவ்வாறு கொண்டாடப்பட வேண்டும் என்பதற்கு உங்கள் மாணவர்களே சாட்சி என்று மாணவ-மாணவிகள் அனைவருக்கும் தனது பொங்கல் வாழ்த்தினைத் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து, ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் பெண்களின் மனம் கவர்ந்த மருதாணி இடுதல், பொங்கல் பானைகளை அலங்கரித்தல், கோலமிடுதல், ஆண்களின் தப்பாட்டம், சலங்கை ஆட்டம், கும்மியாட்டம், கோலாட்டம்,வழுக்குமரம்ஏறுதல்,கபடி,குழுநடனம், தனிநபர் நடனம் போன்ற தமிழ்ப் பாரம்பரியத்தை பறைசாட்டும்விதமாகபல்வேறுவகையானபுகழ்மிக்க நிகழ்வுகள் நடைபெற்றன.இதுபோல நந்தா தொழில்நுட்ப வளாகத்தில் நடைபெற்ற தமிழரின் கலாசார விழாவில் மதுரை மாவட்டத்திலிருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்களின் பொய்கால் குதிரை, ஒயிலாட்டம். காவடியாட்டம், சிலம்பாட்டம், போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து, தமிழரின் பாரம்பரியத்தினை பரைசாற்றும் சிலமபம், கயிறு இழுத்தல், ரங்கோலி, பல்லாங்குழி, உறியடித்தல் போன்ற பல்வேறு விளையாட்டு போட்டிகளில் மாணவ-மாணவிகள் மிகவும் ஆர்வமுடன் கலந்து கொண்டு சமத்துவ பொங்கலிட்டு மகிழ்ச்சி ஆரவாரம பொங்கிட கொண்டாடினார்கள். நிகழ்வுகளின் முடிவில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் மற்றும் சிறப்பு விருந்தினர் முதன்மை விஞ்ஞானி முனைவர் பி. அழகேசன் ஆகியோர் வழங்கி மாணவர்களைப் பாராட்டினார்கள்.

அனைத்துக்சார்புகல்விநிறுவனங்களில்பொங்கல் விழாவினைசிறப்பானமுறையில்ஏற்பாடுசெய்திருந்த கல்லூரி மற்றும் பள்ளிகள் முதல்வர்கள், நிர்வாக அலுவலர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், மற்றும் நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ். திருமூர்த்தி ஆகியோர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்கள்

# மதுராந்தகம் அருகே அதிமுக ஒன்றிய செயலாளர் மகன் இரண்டாம் ஆண்டு நினைவு நாள்

## மரகதம் குமரவேல் எம்.எல்.ஏ. மரியாதை



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வையாவூர் வி.ஜி. குமரன் அவருடைய மகன் கார்த்திகேயன் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் படத்திறப்பு விழா நிகழ்ச்சி வையாவூரில் உள்ள ஒன்றிய அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட கார்த்திகேயன் திருவுருவப்படத்துக்கு மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் அவர்கள்மாலைஅணிவித்துமலர்தூவிஅஞ்சலி செலுத்தினர் ஒன்றிய செயலாளர் வையாவூர் வி. ஜி .குமரன் ஏற்பாட்டில் இரண்டாயிரத்துக்கும்மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு வேட்டி சேலை மற்றும் சமபந்தி விருந்து வழங்கினார்.

மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட 500க்கும் மேற்பட்ட அதிமுக கிளைக் கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசாக வேட்டி சேலை பொங்கலுக்கு தேவையான பொருட்கள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில்அதிமுகநிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம்: புகார் தெரிவிக்க உதவி எண்கள் அறிவிப்பு

சென்னை: போக்குவரத்து ஆணையர் கிரண் குணராலா வெளியிட்ட செய்திக்குறிப்பு:பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் வார விடுமுறையை முன்னிட்டு (ஜன.12 முதல் 18-ம் தேதி வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள் வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால், அதனைத் தடுக்க தமிழகம் முழுவதும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பது தொடர்பாக, பொதுமக்கள் போக்குவரத்து மற்றும் சாலைபாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1 800 425 6151, இணைப் போக்குவரத்து ஆணையரகங்கள் - சென்னை (வடக்கு) 99442 53404, சென்னை (தெற்கு) 97905 50052, மதுரை 90953 66394 , கோவை 91235 93971, துணைப் போக்குவரத்து ஆணையரகங்கள் - விழுப்புரம் 96773 98825, வேலூர் 9840 0 23 011, சேலம் 784 56 3 6423, ஈரோடு 80 569 40040, திருச்சி 906 60 32343, விருது நகர் 90257 23800, திருநெல்வேலி 9 6981 18011, தஞ்சாவூர் 9 5850 20865 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.





மதுரைமாவட்டம்அவனியாபுரத்தில்இருந்துதிருப்பரங்குன்றம்செல்லும்சாலையில் அமைந்துள்ள எவர்கிரீன் வித்யாசாரம் சிபிஎஸ்சி பள்ளியில் இன்று பொங்கல் விழா கொண்டாட்டம் நடைபெற்றது. இதில் பள்ளி ஆசிரியர்கள் ஏற்பாட்டின் பேரில் ஐந்து முதல் பத்து வயது உள்ள பள்ளி குழந்தைகள் காவடி எடுத்து முளைப்பாரி தூக்கி தப்பாட்டம்,கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் ஆடியோபடி சிலம்பம் சுற்றி அவனியாபுரம் முத்துப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் பேரணியாக சென்று நாட்டுப்புற கலைகளை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பறைசாற்றினர். பின்னர் ஜல்லிக்கட்டு காளைகளுடன் பள்ளியில் பொங்கல் வைத்து கலை நிகழ்ச்சி நடைபெற்றது.எல்லாதனியார்பள்ளிகளிலும்வெளிநாட்டுகலாச்சாரம்பண்பாடுமற்றும் நடனம் கற்பிக்கப்படும் ஆனால் நாட்டுப்புற கலைகள் குறித்து குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள் வருங்கால தலைமுறையினருக்கு அதனை எடுத்துச் சொல்லவும் அழியும் விளிம்பில் இருக்கும் கலைகளையும் மக்களிடம் எடுத்துச் செல்லும்படி பேரணியாக சென்றோம் என பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீதேவி தெரிவித்தார்.



தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி சண்முகபுரம் பகுதியில் 8தெருவிலும் நடைபெற்ற கோல போட்டியை மேயர் ஜெகன் பெரியசாமி துவக்கி வைத்து அனைத்து பகுதிகளும் பார்வையிட்டார். இதில் ஏராளமான பெண்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கோல போட்டியில் கலந்து கொண்டனர். கோலப்போட்டி நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் போட்டு ராஜா, மேற்கு மண்டல தலைவர் அன்னலட்சுமி, வட்டக் கழகச் செயலாளர் முன்னாள் மாமன்ற உறுப்பினருமான ரவீந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை முன்னிட்டு த.வெ.க தூத்துக்குடி மத்திய மாவட்டம் அலுவலகத்தில் வைத்து சமத்துவ பொங்கல் விழா தூத்துக்குடி மாவட்ட செயலாளர் எஸ்.டி.ஆர்.சாமுவேல் ராஜ் தலைமையில் நடைபெற்றது. விழா நிகழ்ச்சியில் மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் எம்.சுபத்ரா முருகன், தூத்துக்குடி மாவட்ட துணை செயலாளர்மரியா,விஜி,பொருளாளர்சிவக்குமார்,செயற்குழுஉறுப்பினர்கள்சதீஷ்குமார், மகேஸ்வரன், மகேஸ்வரன், ஜோசப் ஆனந்த், ஜனோஜ் குமார், சுரேஷ்குமார், அனுசியா, மாரின் மற்றும் அணி அமைப்பாளர்கள்,வட்ட செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள்மற்றும்பொதுமக்கள்உள்படபலர்கலந்துகொண்டுவிழாவைசிறப்பித்தனர்.



மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முதல் பரிசாக வீரருக்கு வழங்கப்பட உள்ள கார் மற்றும் சிறந்த காளையின் உரிமையாளருக்கு வழங்கப்பட உள்ள டிராக்டர் ஜல்லிக்கட்டு நடைபெறும் வாடிவாசல் பகுதிக்கு கொண்டுவரப்பட்டு பரிசு மேடையில் கிரேன் இயந்திரம் மூலம் வைக்கப்பட்டது.



சேலத்திலிருந்து சரக்கு லாரி ஒன்று நிலக்கரி லோடு ஏற்றிக்கொண்டு உத்திரமேரூர் சென்று கொண்டிருந்தது இந்த லாரியை நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தைச் சேர்ந்த வேலப்பன் வயது 41 என்பவர் ஓட்டி சென்றார் இந்த லாரி கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள எலவனாசூர்கோட்டை புறவழி சாலையில் சென்று கொண்டிருந்த பொழுது திடீரென (ஸ்டேரிங் லாக்) ஆகி பழுதானது இதனால் ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி சாலையோரம் இருந்த சுமார் 10 அடி ஆழ பள்ளத்தில் பாய்ந்து கவிழ்ந்தது இதில் ஓட்டுநர் வேலவன் லேசான காயத்துடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் இந்த விபத்து பற்றி தகவல் அறிந்த எலவனாசூர் கோட்டை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியில்

# தமிழக அரசால் வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு கல்லூரி மாணவர்களுக்கு திருக்குறள் தொடர்பான இலக்கியப் போட்டிகள்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியில்திருவள்ளுவனுக்குக் குமரியில் வானளக்கும் சிலை, மேனாள் தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களால் நிறுவப்பட்ட இருபத்தைந்தாம் ஆண்டின் வெள்ளி விழாவினைச் மிகச்சிறப்பாக்கொண்டாடும் வகையில், இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழக அரசுக் கல்லூரிகளில் திருக்குறளை இளைய தலைமுறையினரும் அறிந்து, உணர்ந்து போற்றும் வகையில் போட்டிகளையும் கருத்தரங்கத்தினையும் நிகழ்த்த நிதி நல்கை வழங்கப்பட்டது.

தமிழகஅரசால்வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு கல்லூரி மாணவர்களுக்கு திருக்குறள் தொடர்பான இலக்கியப் போட்டிகள் போட்டிகள் நடத்தப்பட்டன. கருத்தரங்கிற்காக வழங்கப்பட்ட நிதியினைக்கொண்டு "வான்புகழ் வள்ளுவம்" என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் தொடக்கவிழா 10-01-2026 சனிக்கிழமை அன்று அழகப்பா அரசு கலைக்கல்லூரி, உமையாள் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இப்பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்கான வரவேற்புரையை நல்கிய கருத்தரங்க முதன்மை ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமாகிய முனைவர் மா. சிதம்பரம் தனது வரவேற்புரையில் திருக்குறளின் பெருமையையும் மாணவர்களிடம் தமிழைக் கொண்டு சேர்ப்பதில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள அரும்பெரும் முயற்சிகளையும் எடுத்துரைத்தார்.

தலைமை உரை வழங்கிய கல்லூரியின் முதல்வர் முனைவர் ப. வசந்தி அவர்கள் திருக்குறளின் அருமையை இன்றைய தலைமுறை உணர்ந்து பின்பற்றுவதின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். கருத்தரங்கின் இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் து.இரவிக்குமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார். கருத்தரங்கினை இணை ஒருங்கிணைப்பாளர்களாகிய இணைப் பேராசிரியர்கள் முனைவர் ப.சு.செல்வமீனா, முனைவர் சி.பரமேஸ்வரி, உதவிப் பேராசிரியர்கள் முனைவர் அ.பாரதிராணி முனைவர் து. இரவிக்குமார் ஆகியோரும் தமிழ் உயராய்வு மையத்தின் பேராசிரியர்களும் திறம்படச் செய்திருந்தனர். கருத்தரங்கத்தின் முதல் நாள் நான்கு அமர்வுகளும் இரண்டாம் நாளான 12.01.2026-திங்கள் கிழமை நான்கு அமர்வுகளும் நடைபெற்றன. அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர்முனைவர் சு. இராசராம், அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் இயக்குநர் முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை , அழகப்பா பல்கலைக்கழக தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சொ. சுரேஷ்,மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் முனைவர் தி.நெல்லையப்பன்,திருவாடானை அரசு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் மு. பழனியப்பன், மாட்சிமை தங்கிய மன்னர்கல்லூரிதமிழ்த்துறைத்தலைவர்முனைவர் சி. சேதுராமன் இராமசாமி தமிழ்க் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. கீதா,

அழகப்பா பல்கலைக் கழகத்தின் மேனாள் உதவிப் பதிவாளர் முனைவர் கி காளைராசன் ஆகியோர் அமர்வுத் தலைவர்களாகப் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தித் தந்தனர் இக்கருத்தரங்கில் அழகப்பா அரசு கலைக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பேராசிரியர்களும் இலங்கை, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்களும், தமிழறிஞர்களும் கட்டுரை வழங்கிச் சிறப்பித்தனர்.

12.01.2026. ,பிற்பகல் 02.30 மணியளவில் உமையாள் அரங்கத்தில் நடைபெற்ற நிறைவு விழாவில் அனைவரையும் வரவேற்ற கருத்தரங்கின் இணை ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறை இணைப் பேராசிரியருமாகிய முனைவர் ப.சு. செல்வமீனா அவர்கள் உலகப் பொதுமறையாகிய திருக்குறளின் அருமைகளை எடுத்துரைத்ததுடன் அதனை மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கும் வகையில் அமைந்த கருத்தரங்கத்தின் நிறைவு விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்களை வரவேற்றுத் திருக்குறளை அனைவரும் கற்றிட வேண்டுமென்று எடுத்துரைத்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் ப.வசந்தி அவர்கள் தமது தலைமையுரையில் மாணவர்கள் திருக்குறள் கருத்துகளை நன்கு உய்த்துணர்ந்துபின்பற்றவேண்டும் என்றும் நிறைவு விழாவில் சிறப்புரை ஆற்றிய சிவகங்கை மாவட்டத்தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு தெ.சிவப்பிரகாஷ் அவர்கள் திருக்குறளின் சிறப்புகளைத் தமது வாழ்வியலுடன் இணைத்துக்கூறிமாணவர்கள் ஒரு பட்டம் பெற்றதுடன் கல்வியை நிறுத்தக்கூடாது, பல பட்டங்களைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்றும் போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற்றுத் தமது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் மாணவர்களுக்கு எடுத்துரைத்ததோடு ஆய்வுக் கட்டுரை வழங்கிய பேராசிரியர்களுக்குச் சான்றிதழ்களையும் வழங்கிச் சிறப்பித்தார். கருத்தரங்க இணை ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த் துறை இணைப் பேராசிரியருமாகிய முனைவர் சி .பரமேஸ்வரி அவர்கள் தமது கருத்தரங்கப் பின்னூட்ட உரையில், 36 கட்டுரைகளுடன்,293 பக்கங்களைக் கொண்ட. *வான்புகழ் வள்ளுவம்* என்னும் பொருண்மையில் நூலாக்கம் செய்யப் பெற்றநூலின் புறக்கட்டமைப்பு பற்றியும் கட்டுரைகளின் வகை,தொகை குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார். கருத்தரங்க நிகழ்வுகளில் பங்கு பெற்ற அனைவருக்கும் கருத்தரங்கின் இணை ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியருமாகிய முனைவர் அ. பாரதி ராணி அவர்கள் நன்றி நவின்றார். வான்புகழ் வள்ளுவம் என்னும் பொருண்மையில் அமைந்த இப் பன்னாட்டுக் கருத்தரங்கு மாணவர்கள் திருக்குறள் பற்றிய கருத்துக்களை முழுமையாக அறிவதற்கு மிகவும் பயனுடையதாக அமைந்தது . தமிழ்நாடு அரசு திருக்குறளைக் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்குக் கொண்டுபோய்ச்சேர்க்க வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தை வான் புகழ் வள்ளுவம் என்னும் பன்னாட்டுக் கருத்தரங்கம் செயல் வடிவமாக்கியுள்ளது



### சேலம், அஸ்தம்பட்டியில் ரூ.103.9 கோடி மதிப்பீட்டில்

# பொதுமக்கள் மற்றும் போட்டித் தேர்வு எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக 'பாரதிதாசன் அறிவுநகம்" நூகை கட்டுமான பணிகளை அமைச்சர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்


தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 13.01.26 சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் சேலம் அஸ்தம்பட்டியில் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் பொதுமக்கள் மற்றும் போட்டித் தேர்வு எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக "பாரதிதாசன் அறிவுலகம்" நூலக கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்குப்பின்னர் மாண்புமிரு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது

பாரதிதாசன் அறிவுலக நூலகத்தின் சிறப்பம்பாங்களாக தரைதளம் 1575 சதுர மீட்டர் பரப்பளவில் 300 இருக்கைகள் கொண்ட கூட்டரங்கம். தனிப்பட்ட புத்தக வாசிப்பறை விஜபி கலைக்கூடம் ஆண்கள், பெண்கள் மாற்றுத்திறனாளிகளுக்கெனதனித்தனி சுகாதார வளாகங்களுடன் இத்தளம் அமைக்கப்பட உள்ளது.

மேலும், முதல் தளமதானது 1053 சதுர மீட்டர் பரப்பளவில் போட்டித்தேர்வு பிரிவு செய்தித்தாள் மற்றும் பருவ இதழ்கள் பிரிவுகளுடனும், 2.ஆம் தளமானது 1100 சதுர மீட்டர் பரப்பளவில் 125 இருக்கைகளுடன் பல்நோக்கு பயிற்சி அரங்கம் 50 இருக்கைகளுடன்

கூட்டுப்பணிபுரியும் இடம். அறிவியல் மையம். 50 இருக்கைகளுடன் குழந்தைகள் பிரிவு, 50 இருக்கைகளுடன் கிட்ஸ் தியேட்டர்ர். விஆர் அறைகளுடன்மயப்பெற உள்ளது.

தொடர்ந்து 3ஆம் தளத்தில் 1000 சதுர மீட்டர் பரப்பளவில் தமிழ் புத்தக வாசிப்பு பிரிவும். 4.ஆம் தனத்தில் 881 சதுர மீட்டர்பரப்பளவில் ஆங்கிலம் புத்தக வாசிப்பு





பிரிவும். 5-ஆ தளத்தில் சதுர மீட்டர் பரப்பளவில் 55 இருக்கைகளுடன் டிஜிட்டல் நூலகம் புத்தகக்கட்டுதல் மற்றும் செயலாக்கப்பிரிவு கொள்முதல் மற்றும் அட்டவணைப்படுத்தும் பிரிவு, அரிய புத்தகங்கள் பிரிவும். 6.வது தளத்தில் 527 சதுர மீட்டர் பரப்பளவில் நூலகஅலுவலகம் தலைமை நூலகர் அறை, காணொளி அறைகளுடன் அமைக்கப்பட உள்ளது. நூலகம் முழுவதும் பொதுமக்கள் எளிதில் சென்றுவரும்வகையில்மின்தூக்கி வசதிகளும் ஏற்படுத்தப்பட உள்ளது

மாண்புமிகுதமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நூலக கட்டுமானப்பபணிகள் அனைத்தையும் உரிய கால அளவில் முடித்து பொதுமக்கள் புத்தக வாசிப்பாளர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு

சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இரா. இராரேந்திரன் அவர்கள் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் சேலம் மாநகராட்சி மேயர் ஆ/இராமசந்திரன், பொதுப்பணித்துறை கண்காணிப்புப்பொறியாளர் பாலரவிக்குமார். செயற்பொறியாளர் எஸ். தியாகராஜன், மாவட்ட நூலக அலுவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருமாவளவனை அவதூறாக பேசிய எச்.ராஜா மீது நடவடிக்கை எடுக்க திருப்பரங்குன்றம் விடுதலை சிறுத்தை நிர்வாகிகள் உதவி ஆணையரிடம் புகார்

திருப்பரங்குன்றத்திற்கு நேற்று வருகை தந்த பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த தேசிய செயலாளர் எச் ராஜா தனது பேட்டி அளித்தபோது விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவனை விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் பெயரையும் மிகவும்அவதூறாகஒருமையில் பேசியதை சமூக வலைதளங்களில் கண்ட விடுதலைச்சிறுத்தைகள் கட்சியினர்

திருப்பரங்குன்றம் விடுதலைசிறுத்தைகட்சி ஒன்றிய செயலாளர் கருவேலம்பட்டி முத்துக்குமார்.

செய்தி தொடர்பாளர் சரவணன் மற்றும் நிர்வாகிகள் திருப்பரங்குன்றம்காவல் உதவி ஆணையர் சசிப் பிரியாவிடம் புகார் கொடுத்தனர் அந்த புகார் மனுவில் எச். ராஜா மீது திருப்பரங்குன்றத்திற்கு வருகை தந்த பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த எச் ராஜா என்பவர் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் அவர்களை

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பெயரையும் மிகவும் அவதூறாக ஒருமையில் பேசியதை சமூக வலைதளங்களில் வந்ததை தொடர்ந்து ராஜா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் தெரிவித்துள்ளனர்.



# வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (VCET) பொங்கல் விழா



வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (VCET), ஈரோடு, திண்டலில் அமைந்துள்ள வளாகத்தில் 12 ஜனவரி 2026 அன்று VCET பொங்கல் 76 விழாவை உற்சாகத்துடன், வண்ணமயமான மற்றும் பண்பாட்டு செழுமையுடன் கொண்டாடியது. இந்த நிகழ்வுக்கு VCET செயலாளர் மற்றும் தொடர்பாளர் எஸ்.டி.சந்திரசேகர், சி. நல்லசாமி, இணைச் செயலாளர் K. குலசேகரன், செயற்குழு உறுப்பினர், அறக்கட்டளை உறுப்பினர்கள் சி. பாலசுப்பிரமணியம், எம். யுவராஜா, கல்லூரியின் முதல்வர் டாக்டர் எம். ஜெயராமன் தலைமை வகித்தனர். முதல்வர் உரையில், பொங்கல் என்பது ஒரு திருநாளாக மட்டுமல்லாமல், தமிழர் அடையாளம், விவசாய பாரம்பரியம். உழைப்பாளர்களுக்கு நன்றி தெரிவிப்பு மற்றும் நிலைத்த நிலை வாழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்தும்விழாவாகும் என்று வலியுறுத்தினார். கல்லூரி வளாகம் முழுவதும் கரும்பு மூங்கில் வாசல்கள், பாரம்பரிய கோலங்கள், பொங்கல் பானைகள் மற்றும் நுட்பக் கலை அலங்காரங்களால் அழகுபடுத்தப்பட்டு, NSS மற்றும் Fine Arts Club மாணவர்களின் பங்களிப்பால் ஒரு கிராமிய விழா சூழலை உருவாக்கியது. விழாவில் மாணவர்கள் அமைத்த கிராமிய வகை கடைகளும் சிறப்பு ஈர்ப்பாக இருந்தது. இவை பாரம்பரிய கைவினை பொருட்கள், இயற்கை உணவுப் பொருட்கள், மண் பானைகள், பனைப் பொருட்கள் மற்றும் பலகலாச்சாரக் காட்சிகளைக் கொண்டிருந்ததால் வருகையாளர்களுக்குசிறந்தகிராமிய அனுபவமாக அமைந்தது. சிறந்த கோலம், சிறந்த பொங்கல் பானை அலங்காரம்,சிறந்தநாட்டுப்புற உடை, பல்வேறு போட்டியில் வென்றவர்களுக்கும் மற்றும் குழு நிகழ்ச்சி போன்ற பிரிவுகளில் மாணவர்கள் பரிசளிக்கப்பட்டனர். அனைத்து மாணவர்களுக்கும் இனிப்பான பொங்கல் வழங்கப்பட்டு, நிகழ்ச்சி குழுவின் நன்றியுரை மூலம் விழா நிறைவுற்றது. மாணவர்களின் செயல்பாட்டு ஈடுபாட்டை பாராட்டிய கல்லூரி நிர்வாகம், பண்பாட்டு அடையாளத்தையும் கல்வி முன்னேற்றத்தையும் இணைத்துச் செல்லும் VCET–இன் அர்ப்பணிப்பை மறுபடியும் வலியு றுத்தியது. VCET பொங்கல் விழா '26, தமிழர் பண்பாட்டு பெருமையை, மாணவர்களின் ஒற்றுமையையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தும் வகையில் அனைவருக்கும் நினைவாக கொண்டாட்டமாக அமைந்தது.



# தூத்துக்குடி சண்முகபுரம் பகுதி 42வது வார்டில் சமத்துவ திராவிட பொங்கல் விளையாட்டு விழா; அமைச்சர் கீதாஜீவன் பரிசுகள் வழங்கினார்

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி சண்முகபுரம் 42வது வார்டு மாநகராட்சி நடுநிலை பள்ளி வளாகத்தில் சமத்துவ பொங்கல் மற்றும் பொங்கல் விளையாட்டு விழா நடைபெற்றது.

பல்வேறுவிளையாட்டு போட்டிகளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்றனர். பெண்களுக்கான கோலப்போட்டிகள் நடைபெற்றன.

விழாவிற்கு வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா மண்டல தலைவரும் 42வது வார்டு மாமன்ற உறுப்பினருமான அன்னலட்சுமி, கலை இலக்கிய அணி ஜீவன் ஜேக்கப், வட்ட செயலாளர் மாரிஸ்வரன், முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், கழக வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் அனைவருக்கும் சமத்துவ பொங்கல் வழங்கப்பட்டது.



ஈரோடுமாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிநேற்று(13.01.2026)மாவட்டஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா 2026 னை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

## கனிமொழி எம்.பி. பிறந்தநாளை முன்னிட்டு

# ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி கடையம் ஒன்றியம் ஏழு அங்கன்வாடிகளுக்கு சுமார் ஒரு லட்சம் மதிப்பிலான பொருட்கள் வழங்கப்பட்டது



கடையம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வீராசமுத்திரம் ஊராட்சி மாலிக் நகர் மற்றும் வீரா சமுத்திரம் அங்கன்வாடிக்கும் மந்தியூர் ஊராட்சி மந்தியூர் ,வாகைக்குளம் ராஜாங்கபுரம்பிள்ளை குளம் ஆகிய அங்கன்வாடிகளுக்கும் கோவிந்த பேரி அங்கன்வாடி உள்ளிட்ட ஏழு அங்கன்வாடிகளுக்கு பீரோ, பேன் ,சேர்,பாய்,வால்கிளாக் ,டிராயிங் உள்ளிட்ட ஒரு லட்சம் மதிப்பிலான பொருட்கள் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் அவர்கள் வழங்கினார்கள்

நிகழ்ச்சிக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜெயக்குமார் அவர்கள் தலைமை தாங்கினார்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஜீனத் பீவி யாகூப் மற்றும் கல்யாணசுந்தரம் ஆகியோர் முன்னிலை வைத்தனர்

நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்புக் குழு முன்னாள் உறுப்பினர் மேகநாதன் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணைஅமைப்பாளர் ஆம்பூர் கருணாநிதி ஒன்றிய துணைச் செயலாளர் வின்சென்ட் மாவட்ட பிரதிநிதிகள் அய்யன் சாமி, துரைப்பாண்டியன் முகம்மது யாகூப், பெருமாள் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன் வெள்ளப் பாண்டியன் கிளைக்கழகசெயலாளர்கள் அகமது ஈசாக்,,அப்துல் சமது, பெருமாள் ,காதர் ராஜன், நடராஜன் மூக்கையா ,நாகராஜன்,முத்தையாதேவர் துரைப்பாண்டி,இசக்கி, பாண்டி ,ராமசாமி, இளங்கோ ,வெள்ள பாண்டியன் சங்கரன் சுந்தரம் ஆரிப் பாண்டியன் விடியல் ஆர்த்தி ராஜபாண்டியன் அட்மா சேர்மன் குணசீலன் இளங்கோ , அகம் முருகேசன் ஜாகிர் உசேன், சிவசக்தி ,ஏ பி என். குணா காசி பாண்டியன் ஆரிப் முகமது கான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் அங்கன்வாடியில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் துணை பொது செயலாளர் கனிமொழி அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு பிஸ்கட் பாக்கெட் வழங்கி சிறப்பித்தார்கள்





ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.01.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா 2026 ல் நடைபெற்ற தமிழர்களின் பாரம்பரிய கலையான தப்பாட்ட நிகழ்ச்சியில் கலைஞர்களுடன் பறை இசைத்தார்/ அரசு அலுவலர்களுக்கு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கயிறு இழுக்கும் போட்டியினை தொடங்கி வைத்தார்.



ஈரோடுமாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிநேற்று(13.01.2026)மாவட்டஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா 2026 ல் அரசு அலுவலர்களுக்காக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு,பொங்கல், கரும்பு வழங்கி பொங்கல் வாழ்த்துக்களைத்தெரிவித்தார். உடன்மாவட்டவருவாய்அலுவலர்சு.சாந்தகுமார்உட்பட பலர் உள்ளனர்.

# பாரம்பரியம் காக்கும் மண்பானைகள்; பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விற்பனை விறுவிறுப்பு

## ஈரோடு மாவட்ட மண்பாண்ட தொழிலாளர்கள் சங்க தலைவர் கனகராஜ் பேட்டி



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் வேளையில், பொங்கல் வைப்பதற்கான மண்பானைகள் தயாரிப்பு மற்றும் விற்பனை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் களைகட்டத் தொடங்கியுள்ளது.

தீவிரமடைந்துள்ள மண்பானை தயாரிப்பு

மண்ணிலிருந்து விளைந்த பொருட்களை, மண்ணால் செய்த பாத்திரத்தில் சமைத்து, இயற்கைக்கு நன்றி செலுத்துவதே பொங்கல் விழாவின் அடிப்படை தத்துவமாகும்.

இதற்காக கடந்த சில மாதங்களாகவே மண்பாண்டத் தொழிலாளர்கள் இரவு பகலாக பானை செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். செங்கற்களால் அடுப்பு கூட்டி, மண்பானையில் மஞ்சள் மற்றும் இஞ்சி கொத்து கட்டி பொங்கலிடுவது இன்றும் பாரம்பரியம் மாறாமல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

விற்பனை குறித்து சங்கத்தலைவர்கருத்து:

இது குறித்து, தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர்கள் (குலாலர்) சங்கத்தின் ஈரோடு மாவட்ட தலைவர் S. கனகராஜ் கூறியதாவது:

"தமிழ்நாட்டில் மண்பானைகளில் பொங்கல் வைத்து வழிபாடு செய்வது காலங்காலமாகத் தொடரும் வழக்கம். அந்த வகையில் ஈரோடு மாவட்டத்தில் பரவலாக மண்பாண்ட கைவினைக் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராக உள்ளன.

தற்போது தமிழக அரசு பிளாஸ்டிக் தடை, சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்து வருவதால், பொதுமக்கள் மத்தியில் மண்பாண்டப் பொருட்களுக்கான வரவேற்பு கணிசமாக அதிகரித்துள்ளது. இதைப் பயன்படுத்த பொதுமக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

சிறிய அளவிலான பானைகள் முதல் மிகப் பெரிய பானைகள் வரை பல்வேறு அளவுகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, அழகிய வேலைப்பாடுகள் மற்றும் வண்ணங்கள் தீட்டப்பட்ட பானைகளை மக்கள் விரும்பி வாங்குகின்றனர். இந்தப் பானைகள் அவற்றின் அளவு மற்றும் வேலைப்பாடுகளைப் பொறுத்து ரூ. 100 முதல் ரூ. 1500 வரை விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போது தமிழக அரசு 'சமத்துவப் பொங்கல் 2026' என அறிவித்துப் பண்டிகையை ஊக்கப்படுத்துவதால், பானை விற்பனை மேலும் சூடுபிடித்துள்ளது.

இதற்காகத் தமிழக முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எங்களது நன்றிகளையும், பொதுமக்களுக்குப் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்."

மண்பானையின் மருத்துவப் பயன்களும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

மண்பானை வெப்பத்தைச் சீராகப் பரவச் செய்வதால், அதில் சமைக்கப்படும் பொங்கல் அதிக சுவையுடனும், சத்துக்கள் குறையாமலும் இருக்கும். மண்ணின் காரத்தன்மை உணவின் அமிலத்தன்மையைச் சமன்படுத்தி செரிமானத்திற்கு உதவுகிறது.

மேலும், இவை முழுமையாக மண்ணோடு மண்ணாக மட்கிப் போகக்கூடியவை என்பதால், எவ்விதமான சுற்றுச்சூழல் மாசுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை. மண்பாண்டங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நாம் நமது உடல் நலத்தைப் பாதுகாப்பதோடு, நலிந்து வரும் மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்திப் பாரம்பரியத்தைக் காக்க முடியும் என கூறினார்.



ஈரோடுமாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிநேற்று(13.01.2026)மாவட்டஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா 2026 ல் நடைபெற்ற தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பாட்டத்தில் பங்கேற்று சிலம்பம் சுற்றி சிறப்பித்தார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.